*__ரத ஸப்தமியும் பீஷ்ம அஷ்டமியும்__*


# உலக மகா தியாகி பீஷ்மர் நினைவு தினம்

Compiled by London Swaminathan

Post No. 815 Date 3 February 2014

**ரத ஸப்தமி: 6-2-2014 வியாழன்**

**பீஷ்ம அஷ்டமி 7-2-2014 (தை கிருத்திகை) வெள்ளி**



ரத ஸப்தமி, பீஷ்ம அஷ்டமி ஆகிய இரண்டு முக்கிய தினங்கள் தை மாதத்தில் அடுத்தடுத்து வரும். இரண்டு நாட்களிலும் நீர்க் கடன் (அர்க்யம்) செலுத்த வேண்டும் என்று பஞ்சாங்கங்கள் கூறுகின்றன.

__பீஷ்ம அஷ்டமி__

மஹா பாரதத்தில் நாம் காணும் ஒரு அற்புத மனிதர் பீஷ்மர். அவருடைய உண்மைப் பெயர் தேவ விரதன். மஹா பாரத போருக்குப் பின்னர், அவர்



58 நாட்களுக்கு அம்புப் படுக்கையில் படுத்து, உலகில் ‘அக்யுபங்சர்’ வைத்தியத்தின் பெருமையை முதல் முதலில் அறிமுகப்படுத்தியவர். தந்தை சந்தனுவின் முறையற்ற காதலுக்காக, தனது வாழ்நாள் முழுதும் பிரம்மசர்ய விரதம் அனுஷ்டித்து தேவர்களையும் மனிதர்களையும் வியக்க வைத்த மாபெரும் மனிதன். உலக வரலாற்றில் இது போன்ற தியாகத்தை எங்கும் கண்டதில்லை. இனியும் காண முடியாது. தன்னுடைய காம சுகத்துக்காக தனது மகன் செய்த மாபெரும் தியாகத்தை மனதிற்கொண்டு– பீஷ்மருக்கு சந்தனு ஒரு வரம் தந்தார். நீ எவ்வளவு காலம் இந்தப் பூமியில் வாழ விரும்புகிறாயோ, அவ்வளவு காலம் உயிருடன் இருப்பாய். நீ இறக்கும் நாள், நேரம் எல்லாவற்றையும் நீயே முடிவு செய்யும்வரை உன் உயிர் போகாது” என்று வரம் கொடுத்தார். பீஷ்மர் உத்தராயண புண்ய காலம் வரும் வரை உயிருடன் இருந்தார்.

( பீஷ்ம என்றால் அதி அத்புதம், அதி பயங்கரம், மஹத்தான சபதம் செய்தவன். ஆங்கிலத்தில் awesome, terrible, wonderful ) -----லண்டன் சுவாமிநாதன்)

## பீஷ்மர் ஏன் அழுதார்?

அம்புப் படுக்கையில் படுத்துக் கொண்டிருந்த பீஷ்மரின் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தது. எல்லோருக்கும் ஒரே ஆச்சரியம். புலன் ஐந்தையும் வென்ற மாவீரன் மஹா தியாகி. வாழ்நாள் முழுதும் பிரம்மச்சாரி. போருக்கு அஞ்சாதவர். சாகும் நாளைத் தேர்ந்தெடுக்கும் அரிய வரம் பெற்றவர். வேத கால தெய்வங்களான அஷ்ட வசுக்களில் ஒருவர். வயதில் எல்லோருக்கும் மூத்த தாத்தா. அவர் அழுதால்.............. அவரையும் கூட மாயை பற்றிக்கொண்டு விட்டது என்று அர்ஜுனன் ‘கிசு கிசு’ பேச ஆரம்பித்தான் பாண்டவர்களும் கண்ணனும் பீஷ்ம பிதாமஹரை நெருங்கி அன்போடு காரணம் கேட்டனர்.

Picture of Sun Kolam/Rangoli

பீஷ்மர் சொன்னார்: ஹே, கிருஷ்ணா ! உனக்குத் தெரியுமே நான் எதற்காக கண்ணீர் விடுகிறேன் என்று. நீதான் கடவுள். நீயே தேர் ஓட்டியும் கூட பாண்டவர்களுக்கு இவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் எப்படி வந்தன? கடவுளுடைய திருவிளையாடல்களை யாராலும் கொஞ்சம்கூடப் புரிந்து கொள்ள முடியாது என்று எண்ணிய மாத்திரத்தில் என்னையும் அறியாமல் பொல பொல என்று கண்ணீர் பெருகிவிட்டது. என்னால் கட்டுப்படுத்த முடியவில்லையே ! என்றார் பீஷ்மர் என்னும்பெருந்தகை.

ஆதாரம்: ராமகிருஷ்ன பரமஹம்சர் உபதேச மஞ்சரி (ஆங்கிலப் பதிப்பு ஐட்டம் எண். 666, பக்கம் எண் 178)

மஹாபாரதம் ஒரு உலக மஹா அற்புதம். ஒரு லட்சம் ஸ்லோகங்கள் இரண்டு லட்சம் வரிகள். பத்து லட்சம் சொற்கள். இதில் இல்லாதது உலகில் இல்லை என்னும் பெருமை உடைத்து!

Pictures of Ganapathi Sachidananda Swamiji doing Ratha Saptami Puja



## ரத ஸப்தமி ஸ்நான மந்திரம்

ரத ஸப்தமி என்பது சூரியனைக் கொண்டாடும் பண்டிகை. மகர சங்கராந்தி/பொங்கல் போன்றது. சூரியன் கோலத்தைப் போட்டு வழிபடுவர். தலையில் தோளில் சூரியன் பெயரையுடைய அர்க்க பத்திரத்தை (எருக்கு இலை: Calotropis procera ) அரிசியுடன் வைத்துக் கொண்டு குளிப்பர். தலையிலும் தோளிலும் விளக்கை வைதுக் கொண்டு அதை ஆற்றில் மிதக்கவிடுவர்.

கீழ்கண்ட ஸ்நான மந்திரம் விஜய வருஷம் ஸ்ரீ புவனேஸ்வரி பஞ்சாங்கத்திலிருந்து எடுக்கப்பட்டது; நன்றி.

எருக்கு இலை, அருகம் புல், அக்ஷதை இவைகளை கையில் வைத்துக் கொண்டு கீழ்கண்ட ஸ்லோகங்களைச் சொல்லி ஸ்நானம் செய்யவும் (குளிக்கவும்).

1.ஸப்த ஸப்த ப்ரியே தேவி ஸப்த லோகைக தீபிகே

ஸப்த ஜன்மார்ஜிதம் பாபம் ஹர ஸப்தமி ஸத்வரம்

2.யதா ஜன்ம க்ருதம் பாபம் மயா ஸப்தஸு ஜன்மஸு


தன்மே ஸோகஞ் ச மோஹஞ் ச மாகரீகந்து ஸப்தமீ

3.ஏதஜ் ஜன்ம க்ருத் பாபம் யச்ச ஜன்மாந்தரார்ஜிதம்

மநா வாக் காயஜம் பாபம் ச ஞாதாக்ஞாதேச யேபுன்

4.இதி ஸப்த விதம் பாபம் ஸ்நாநம் மே ஸப்த ஸப்திகே

ஸப்த வ்யாதி ஸமாயுக்தம் ஹர மாகரி ஸப்தமி



<u>ரத ஸப்தமி அர்க்ய மந்திரம்:</u>

ஸப்த ஸப்தி வஹப்ரீத ஸப்த லோக ப்ரதீபன

ஸப்தமீ ஸஹிதோ தேவ க்ருஹானார்க்யம் திவாகர

திவாகராய நம: இதமர்க்யம் இதமர்க்யம் இதமர்க்யம்

<u>பீஷ்ம அஷ்டமி அர்க்ய மந்திரம்:</u>

1.வையக்ரபாதி கோத்ரா ய ஸாங்க்ருதி ப்ரவராய ச

கங்காபுத்ராய பீஷ்மாய ஆஜன்ம ப்ரம்மசாரினே

பீஷ்மாய நம: இதமர்க்யம்

2.அபுத்ராய ஜலம் தத்மி நமோ பீஷ்மாய வர்மணே

பீஷ்ம ஸாந்தநவோ வீ ர ஸத்யவாதீ ஜிதேந்த்ரிய:

ஆபிரத் பிரவாப்னோது புத்ரபௌத்ரோசிதாம்ச்ரியம்

பீஷ்மாய நம: இதமர்க்யம்

3.வஸூநாம் அவதாராய ஸந்தநோராத்மஜாய

அர்க்யம் ததாமி பீஷ்மாய ஆபால ப்ரம்ம சாரினே

பீஷ்மாய நம: இதமர்க்யம்



Picture of Erukku (Tamil) =Arka Patra (Sanskrit)=Calotropis procers (botanical name)

பீஷ்மாச்சாரியார் நித்ய ப்ரம்மசாரி. எனவே அவருக்கு சந்ததி இல்லை. ஆகவே பீஷ்மாஷ்டமி அன்று தகப்பனார் உள்ளவர்கள் இல்லாதவர்கள் எல்லோரும் மேற்கண்ட மந்திரங்களைச் சொல்லி அர்க்யம் விடவேண்டும்.

இதனால் கடந்த ஒரு வருஷத்தில் செய்த பாபங்கள் நீங்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.

அர்க்யம்= நீர்க் கடன்.

(மேற்கண்ட மந்திரங்கள் பஞ்சாங்கத்தில் இருந்து எடுக்கப்பட்டவை.)

**புறநானூற்றில் எருக்கம் இலை**

லண்டன் சுவாமிநாதன் பிற்சேர்க்கை: 2000 ஆண்டுகளுக்கு முன் புறநானூற்றில் கபிலரும், பீஷ்மர் பெயரைச் சொல்லாமல், இவ்வாறு கூறுகிறார்:

**நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப்**

**புல் இலை எருக்கம் ஆயினும், உடையவை**

**கடவுள் பேணேம் என்னா;** (புறம். 106)

பொருள்: நல்லதாயினும் தீயதாயினும் குவிந்த பூங்கொத்தும் புல்லிய இலையும் உடைய எருக்கம் பூவாயினும் அன்போடு சூட்டினால் தெய்வங்கள் ஏற்றுக் கொள்ளும்; வேண்டாம் என்று சொல்லாது. ஆக எருக்கம் பூவையும் இலையையும் பயன்படுத்துவது 2000 ஆண்டுகளாக தமிழர்கள் அறிந்ததே. விநாயகருக்கும் இதையே படைக்கிறோம். பிள்ளையார் வழிபாடு ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரே தமிழகத்தைல் பிரபலமானாலும் கபிலர் என்ற பெயர் பிள்ளையாரின் 16 முக்கியப் பெயர்களில் ஒன்று என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். கண்ண பிரானும் பகவத் கீதையில் (9-26) பத்ரம், புஷ்பம், பலம், தோயம்= இலை, பூ, பழம், தண்ணீர் ஆகிய நான்கில் எதைப் பக்தியுடன் கொடுத்தாலும் அதை நான் ஏற்கிறேன் என்று கூறுவதையும் ஒப்பிடுதல் பொருத்தம்.

**குசேலர் பக்தியுடன் கொடுத்தது அவல்**

**திரவுபதி பக்தியுடன் கொடுத்தது கீரை**

**கஜேந்திரன் (யானை) பக்தியுடன் கொடுத்தது பூ**

**சபரி என்னும் வேடுவப் பெண் பக்தியுடன் கொடுத்தது பழம்**

**ரந்திதேவன் பக்தியுடன் கொடுத்தது தண்ணீர்**

**இவை எல்லாவற்றையும் கடவுள் அவதாரங்கள் ஏற்றன.**

பெரியோர்களைத் தரிசிக்கும்போதும் ஆலயத்துக்குச் செல்லும்போதும் வெறும் கையுடன் செல்லக் கூடாது. அங்கு சமர்ப்பிப்பதற்காக, அற்பமானதாயிருந்தாலும், ஏதேனும் ஒன்றைக் கொண்டு செல்ல வேண்டும் என்று ராமகிருஷ்ண பரம ஹம்சர் சொல்லுவதையும் நினைவிற் கொள்க.

800 க்கும் மேலான கட்டுரைகளில் இது தொடர்பான வேறு கட்டுரைகள்:

1.Bhishma – First Man to Practise Acupuncture

Contact swami_48@yahoo.com